## 2.48 விரிவாக்க அலுவலர்கள் – துணை வட்டார வளர்ச்சி அலுவலர்களாக பதவி உயர்வு பெற பணித் தகுதிகள் – மாற்றம்

ஊரக வளர்ச்சி (இ7) துறை

அரசாணை (நிலை) எண். 697 நாள் : 30.8.1990

படிக்க :

1. அரசாணை (நிலை) எண். 587, ஊரக வளர்ச்சித் துறை, நாள் 12.4.1984
2. ஊரக வளர்ச்சி ஆணையர் கடித எண்.82062/87/டி2, நாள் 31.1.1989.
3. ஊரக வளர்ச்சி இயக்குநர் கடித எண்.82062/87/4பி, நாள் 22.2.1990.

**ஆணை**

பார்வை ஒன்றில் கண்டுள்ள அரசாணையில், வெளியிடப்பட்டுள்ள ஒரு பணி விதிகளில் விரிவாக்க அலுவலர்கள், துணை வட்டார வளர்ச்சி அலுவலர் பதவி உயர்வு பெறுவதற்கு கீழே குறிப்பிடப்பட்டுள்ள ஒவ்வொரு பதவியிலும் குறைந்தபட்சம் ஓராண்டு பணிபுரிந்திருக்க வேண்டும் என ஆணையிடப்பட்டுள்ளது.

விரிவாக்க அலுவலர் (ஊராட்சி)
விரிவாக்க அலுவலர் (சமூகக் கல்வி மற்றும் மக்கள் தொடர்பு)
விரிவாக்க அலுவலர் (நிர்வாகம்)

2. ஒரு பணிவிதிகள் வெளியிடப்பட்ட பின்னர், கீழ்க்கண்ட விரிவாக்க அலுவலர் பதவிகள் வட்டாரங்களில் புதிதாகத் தோற்றுவிக்கப்பட்டுள்ளன,

1. விரிவாக்க அலுவலர் (சத்துணவு)
2. விரிவாக்க அலுவலர் (சமூகக் காடுகள்)
3. விரிவாக்க அலுவலர் ( ஊரக நிலமற்றோர் வேலைவாய்ப்பு உறுதியளிப்புத் திட்டம்), மற்றும்
4. விரிவாக்க அலுவலர் (ஆதிதிராவிடர் நலம்)

புதிதாக ஏற்படுத்தப்பட்ட மேற்கண்ட பணியிடங்களில் பணிபுரியும் விரிவாக்க அலுவலர்களை துணை வட்டார வளர்ச்சி அலுவலர் பதவி உயர்வுக்கு பணித் தகுதி கணக்கிடுவதற்கான கருத்துருவை ஊரக வளர்ச்சி இயக்குநர் அனுப்பியுள்ளார்.

3. ஊரக வளர்ச்சி இயக்குநரின் கருத்துரு கவனமாக பரிசீலிக்கப்பட்டது. பரிசீலனைக்குப்பின், புதிதாக ஏற்படுத்தப்பட்டுள்ள விரிவாக்க அலுவலர் பணியிடங்களில் பணிபுரிந்த காலத்தையும் துணை வட்டார வளர்ச்சி அலுவலர் பதவி உயர்வுக்கு பணித் தகுதியாகக் கருத்தில் கொண்டு கீழே குறிப்பிடப்பட்டுள்ள மூன்று பிரிவுகளில், குறைந்த பட்சம் ஓராண்டுக்காலம் ஒவ்வொரு பிரிவிலும் பணிபுரிந்திருக்க வேண்டும் என அரசு ஆணையிடுகிறது.

| பிரிவு–1 | பிரிவு–2 | பிரிவு–3 |
|---|---|---|
| விரிவாக்க அலுவலர் (நிர்வாகம்) | விரிவாக்க அலுவலர் (சமூகக் கல்வி மற்றும்மக்கள் தொடர்பு) | விரிவாக்க அலுவலர் (ஊராட்சி) |
| விரிவாக்க அலுவலர் (கணக்கு – சென்னை அலகு) | விரிவாக்க அலுவலர் (ஆதிதிராவிடர் நலம்) | |
| விரிவாக்க அலுவலர் (சத்துணவு) | விரிவாக்க அலுவலர் (சமூகக் காடுகள்) | |
| விரிவாக்க அலுவலர் ( ஊரக நிலமற்றோர் வேலைவாய்ப்பு உறுதியளிப்புத் திட்டம்) | | |

4. மேலே பத்தி 3–ல் கண்டுள்ள ஆணைகளின் அடிப்படையில், ஒரு பணி விதிகளுக்கு திருத்தங்கள் செய்திடத் தேவையான கருத்துருவை அரசுக்கு மிக்க விரைவில் அனுப்பி வைக்குமாறு ஊரக வளர்ச்சி இயக்குநர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

(ஆளுநரின் ஆணைப்படி)

**சு. சரவணவேலு**
அரசு துணைச் செயலாளர்